செய்தி வெளியீடு எண். 164 நாள். 26.03.2018

# தமிழ்நாடு அரசு கூட்டுப்பண்ணையம் திட்டத்தின் மூலம் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு அரசு நிதி உதவி

உணவு தானிய உற்பத்தி இரண்டு மடங்கு பெருகவும் அதன் மூலம் விவசாயிகளின் வருமானம் மூன்று மடங்கு அதிகரிக்க செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு வேளாணமைத்துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களை விவசாயிகளுக்கு அளித்து வருகிறது. தற்போது கூட்டுப்பண்ணையம் திட்டம் அறிவிக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்திற்கு வேளாண் துறை மூலம் 225 உழவர் ஆர்வாளர் குழுக்களும், தோட்டக்கலை துறையில் 55 உழவர் ஆர்வளர், குழுக்களும் ஆக மொத்தம் 280 உழவர் ஆர்வளர் குழுக்கள் உள்ளடக்கிய 56 உழவர் உற்பத்தியாளர் குழு திருவள்ளூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு ஒரு உழவர் உற்பத்தியாளர் குழுக்கு ரூ. 5 இலட்சம் வீதம் 56 குழுக்களுக்கு ரூ. 2.8 கோடி நிதி ஒதுக்கப்பட்டடுள்ள நிலையில் ஓவ்வொரு உழவர் உற்பத்தியாளர் குழுவும் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரங்கள் தாங்களாகவே தெரிவு செய்து கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 12.03.2018 வேளாண் இயந்திரங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பல்வேறு முன்னனி நிறுவனங்களின் வேளாண் இயந்திரங்களை உழவர் உற்பத்தியாளர் குழுக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு விலை பட்டியலுடன் காட்சிப்படுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் வேளாண் இயந்திரங்கள் விற்பனையாளர் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. அவ்வமையம் ஓவ்வொரு குழுவும் இயந்திரங்களின் விலை விவரத்தோடும் தெரிவு செய்யபட்ட ஓவ்வொரு இயந்திரத்தையும் நிறுவனங்களிடம் நேரடியாக பேரம் பேசி விலை நிர்ணயம் செய்ய கூட்டம் நடைப்பெற்றது. அதன் அடிப்படையில் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தாங்களுக்கு தேவையான இயந்திரங்கள் வாங்க அரசு வாங்கும் ரூ. 5 இலட்சம் தொகுப்பு நிதி ஒதுக்கீடு தற்போது விடுவிக்கப்பட்டது. அதற்கான வேளாண் இயந்திரங்கள் வழங்கி இன்று மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர், கடம்பத்தூர் மற்றும் பூண்டி வட்டார குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்களை இன்று வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் 5600 விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**